# The Bible Standard

(தமிழ் வெளியீடு)

“உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்.” சங். 43:3



**“LIFT UP A STANDARD FOR THE PEOPLE”**
**Isaiah 62 : 10**

Translated from BS 879
Published on May 16, 2014

பொருளடக்கம்

குழந்தைகள் நித்திய வேதனையிலிருந்து இரட்சிக்கப்படுகிறார்கள் .......... 2

நான் குருடனாயிருந்தேன் இப்பொழுது காண்கிறேன் ................ 7

BS Tamil Version - 25 2014

# குழந்தைகள் நித்திய வேதனையிலிருந்து இரட்சிக்கப்படுகிறார்கள்

**Infants Saved from Torture**

“... இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே, இப்பொழுதோ அவைகள் பரிசுத்தமாயிருக்கின்றன” 1 கொரி. 7 : 14

பரிசுத்தமுள்ள மற்றும் பரிசுத்தமில்லாத குழந்தைகளுக்கிடையே வித்தியாசப்படுத்திக் காட்டுகிற இந்த தலைப்பு வசனம் தவறான கருத்து மூலம் குழந்தை இரட்சிப்பு மற்றும் குழந்தைக்கு நரக தண்டனை என்ற பொருளில் எல்லா சபைப் பிரிவுகளிலும் பரவியிருக்கும் பெரிய குழப்பத்துக்கு அடிப்படையாகக் காணப்படுகிறது. இந்த தலைப்பு வசனத்தை ஆராய்வதற்கு முன்னால், சில வருடங்களுக்கு முன்பு அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள பிரஸ்பிட்டேரியன் பொதுச்சபையில், இந்த கருத்தின் மீது எடுக்கப்பட்ட மிக முற்போக்கான இறையியல் நடவடிக்கையின் உண்மையை நம்முடைய வாசகர்களின் கவனத்திற்கு குறித்துக்காட்ட நாங்கள் விரும்புகிறோம். இது பிரஸ்பிட்டேரியன் (Presbyterian) சபையினரின் விசுவாச அறிக்கையை, தெரிந்தெடுப்புக்குட்படாத குழந்தைகளையும், அதுபோல தெரிந்தெடுப்புக்குட்பட்டவர்களையும் காத்துக் கொள்ளுமளவுக்கு மாற்றியமைத்தது, சில குழந்தைகள் மரிக்கும்போது பரலோகத்துக்கும், மற்ற குழந்தைகள் நித்திய வேதனைக்கும் செல்ல வேண்டும் என்ற திட்டத்தைத் தேவன் ஏற்படுத்தியிருக்கிறார் என்கிற எண்ணம் அநேக நூற்றாண்டுகளாக கத்தோலிக்கர் மற்றும் பிராட்டெஸ்டெண்ட் கிறிஸ்தவ மக்கள் அனைவருடைய மனங்களையும் அதிக குழப்பத்திற்குள்ளாக்கியிருந்தது, தெரிந்தெடுப்புக்குட்பட்ட குழந்தைகள் இரட்சிக்கப்படுவார்கள் என்றும், தெரிந்தெடுப்புக்குட்படாத குழந்தைகள் வாதிக்கப்படுவார்கள் என்றும் சிலர் கூறினர். மற்றவர்களோ, எந்த குழந்தையும் ஞானஸ்நானத்தின் மூலமாக சபைக்கு கொண்டுவரப்பட்டு இரட்சிக்கப்படுவார்கள் என்றும், ஞானஸ்நானம் பெறாத அல்லது தண்ணீர் தெளிக்கப்படாத குழந்தைகள் நித்திய வேதனைக்கு அல்லது வேதனையில்லாமல், நித்திய இருள் மற்றும் பெருமூச்சுகள் விடும் இடமாகிய ரோமானியர்களின் நரக பகுதிக்கு குழந்தைகளின் நரகத்துக்கு செல்லுவார்கள் என்றும் கருதினர். மற்றவர்களோ மறுபடியும் பிறவாமல் ஒருவரும் இரட்சிக்கப்பட முடியாது என்றும், குழந்தைகள் எப்படி மறுபடியும் பிறக்க முடியும் என்ற குழப்பத்தில் இருந்தனர். ஆகவே, குழந்தைகளில் யார்தான் இரட்சிக்கப்படமுடியும் என்று அவர்கள்




நம்பிக்கை கொள்ள முடியும்? நல்ல மனிதர்கள் அனைவருடைய இருதயங்களும், மனங்களும் அநேக நூற்றாண்டுகளாகவே இந்த குழப்பமான கருத்துக்களின் காரணமாக மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

பிரஸ்பிட்டேரியன் சபைப்பிரிவைப் பார்க்கும்போது, அன்பும் இரக்கமும் வெற்றி பெற்றிருப்பது மனதுக்கு திருப்தியளிப்பதாக உள்ளது. அவர்களைப் பொருத்தமட்டில் தினமும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் நரக வேதனைக்குள் செல்வதற்குப் பதிலாக பரலோகத்துக்குச் செல்கிறார்கள். நிச்சயமாகவே, இது ஒரு மிஷனரி திட்ட அறிக்கையாகும்; அற்பமான விகிதாச்சாரம் அல்ல. இந்த வீதத்தில், நரகத்துடன் ஒப்பிடுகையில், சீக்கிரம் குறிப்பிடத்தக்க விகிதத்தைப் பரலோகம் பெற்றுக் கொள்ளத் தொடங்கும் என்று சந்தேகமின்றி அவர்கள் நம்புகிறார்கள். இப்பொழுது கோடிக்கணக்கான எண்ணிக்கையுள்ள, கடந்த கால தெரிந்தெடுப்புக்குட்படாத குழந்தைகளின் விடுதலையைக் குறித்து எந்த அளவிலும் நோக்கிப் பார்க்காத சகோதரர்களுக்காக நாங்கள் வருந்துகிறோம். இது கவனிக்க தகுதியானதும், அவர்கள் கவனத்தை ஈர்க்கும் என்றும் நாங்கள் நம்புகிறோம். இந்த காரியம் மிகவும் எளிதாக சரிசெய்யக்கூடியதாக இருந்தும், குழந்தைகளுக்கு உதவி செய்யும் பெருந்தன்மையான பணியில் பிரிஸ்பிட்டேரியன்களின் மாதிரியையும், வழிகாட்டுதலையும் பின்பற்றுவது எல்லா கிறிஸ்தவ சபைப்


**COURTESY BY :**

**The Bible Standard -**(ISSN: 1556-8555) Publisher, the **Laymen’s Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year’s subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

பிரிவினர்களுக்கும் ஏன் பொருத்தமான காரியமாக இல்லாமற் போயிற்று? ஆனால் அந்த பிரமாணங்க ளெல்லாம் எவ்வளவு அறிவீனமானதாகத் தோன்றுகிறது! வேதாகமத்தின் எளிய போதனை இதற்கு மாறாக எவ்வளவு அழகுள்ளதாயிருக்கிறது. புறஜாதி தேசங்களிலும் அதைப் போல கிறிஸ்தவ தேசங்களிலுமுள்ள முதியோர் மற்றும் இளையவர் மேசியாவின் ராஜ்யத்தின் உயிர்த்தெழுதல் வல்லமை மூலமாக, அதன் பிரகாசிப்பிக்கப்படுதல், உயர்த்தப்படுதல் மற்றும் உயிர்ப்பிக்கும் செயல் விளைவுகள் மூலமாக இரட்சிப்பு எல்லாருக்குமுள்ளது. தேவனுடைய செய்தியான வேதாகமம் இப்போது அவருடைய ஜனங்களுக்காக திறந்து வைக்கப்பட்டு, மின்சார விளக்கைப்போல பிரகாசித்துக் கொண்டிருக்கும்போது அதற்கு மாறாக, விலங்கு கொழுப்பாலான மெழுகுவர்த்தியின் இருள்போன்ற இருண்ட யுகத்தின் தப்பறைகளான விசுவாசப் பிரமாணங்களால் நாம் இன்னமும் ஏன் துன்பப்பட வேண்டும்?

பிரஸ்பிட்டேரியன் சபை மார்க்கத்தைச் சேர்ந்த சகோதரர்களால் ஏற்படுத்தப்பட்ட நடவடிக்கைக்காக நாங்கள் மிகுந்த அனுதாபங்கொள்கிறோம். ஆனால், அப்படியிருந்தும், வேதாகமம் வேறுவிதமாக போதிக்கிறது என்று நாங்கள் நம்புகிறபடியால், அவர்களுடைய முடிவுகளை ஏற்றுக்கொள்ளவோ ஒத்துப்போகவோ நம்மால் முடியவில்லை, தெரிந்தெடுப்பைக் குறித்த பிரஸ்பிட்டேரியரின் கருத்து, பெரியவர்கள் மற்றும் குழந்தைகளிலுள்ள தெரிந்தெடுக்கப்படாதவர்களுக்கு செயல்படுத்தப்படுவதை கடினமாக்குகிறது என்று தெளிவாக உணர்கிறோம். தேவன் உலகத்தார் மத்தியிலிருந்து சபையைத் தேர்ந்தெடுத்து தேர்வு செய்கிறார் என்று வேத வாக்கியங்கள் அறிவிப்பதைக் காண்கிறோம். தெரிந்தெடுக்கப்படாதவர்கள், தெர்ந்தெடுப்புக்குட்படாதவர்கள் என பொருத்தமாகப் பெயரிடப்படுவதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் மேசியாவின் ராஜ்யத்தில் உடன் சுதந்திரராகும்படி தெரிந்தெடுக்கப்படாதவர்கள் நித்திய வேதனைக்கென்று முன் குறிக்கப்பட்டவர்கள் என்று சுட்டிக்காட்டும் எந்த வசனமும் வேதாகமத்தில் இல்லை என்று நாம் காண்கிறோம். பிரஸ்பிட்டேரியன் நண்பர்கள் அவர்களுடைய மாற்றப்பட்ட சபை பிரமாணங்களுக்கு தக்கவாறு அவர்களை மாற்றிக் கொள்ளும் முயற்சியில் குறிப்பிடத்தக்க அளவுக்கு மன உளைச்சலை அனுபவித்திருக்கக் கூடும் என்று நாங்கள் உணர்கிறோம். ஏனெனில் தெரிந்தெடுக்கப்படாத குழந்தைகள் இல்லையெனில், பின்பு எல்லா குழந்தைகளுமே தெரிந்தெடுக்கப்பட்டவர்களாவர்: மேலும், குழந்தைகளாயிருக்கையில் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் பெரியவர்களாகும்போது எவ்வாறு அவர்களுடைய முன்குறிக்கப்பட்ட நிலை மாறக்கூடும்? பிரஸ்பிட்டேரியன் சகோதரர்களுக்கு எங்களுடைய பரிவான அறிவுரை என்னவெனில், விசுவாசப்பிரமாணம் முழுவதும் மாற்றப்பட வேண்டும்; அல்லது இதுவும் மற்றெல்லா பிரமாணங்களும் கைவிடப்பட்டு வேதாகமம் மட்டுமே முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டால், இன்னும் சிறப்பாக இருக்கும். அப்போது, எல்லா வேதாகம மாணவர்களும் தவறான அபிப்பிராயங்கள் எதுவுமன்றி பரஸ்பர உதவி செய்வதற்காகவும், வேதத்தின் அடிப்படையில் கிருபையில் தடையில்லாத வளர்ச்சி பெறும்படியாகவும் கூடி வரமுடியும்.

நாங்கள் பிரஸ்பிட்டேரியன்களைப் பற்றி குறிப்பிட்டிருந்தாலும், எங்களுடைய கருத்து கிறிஸ்தவர்கள் எல்லோரையும் உள்ளடக்கியிருக்கின்றது. மெய்யாகவே, பிரஸ்பிட்டேரியன்களைவிட மற்ற அநேகர் பெரியவர்களும், சிறுவர்களுமாக குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு 90,000 அல்லது ஒவ்வொரு வருடமும் 3,20,000,000 பேரை அவர்கள் தெரிந்துகொள்ளப்படாதவர்கள் என்பதினால் மட்டுமல்லாமல், மீண்டும் பிறவாததால் அல்லது ஞானஸ்நானம் எடுக்காத காரணத்தினால் “நித்திய வேதனைக்கு அனுப்பிக்கொண்டே இருக்கிறார்கள்.” நிச்சயமாகவே, அப்படிப்பட்டதொரு கருத்துக்கு, புத்திசாலித்தனமான எந்த ஜனங்களும் ஒத்துப் போவதாக இல்லை. இருண்ட யுகத்தில் ஏதோ ஒரு மிகப்பெரிய தவறு ஏற்பட்டிருக்கிறது. அந்த தவறின் பாதிப்பின் காரணமாக நம்முடைய விசுவாசப்பிரமாணங்களில் வெளிப்படையாக நம்முடைய தேவன் அவதூறு செய்யப்பட்டிருக்கிறார் என்பதை எல்லாரும் நிச்சயம் ஒப்புக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட அக்கிரமங்களைத் திட்டமிடுகிற ஒரு மனிதன் சரித்திரத்தில் அறியப்பட்டிருக்கிற எந்த ஒரு மனிதனைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிக பேய்த்தனமுள்ளவனாக இருக்கிறான் என்ற உண்மையை இன்றைய நாளில் சிந்திக்கிறவன் ஒவ்வொருவனும் நிச்சயமாக ஒப்புக் கொள்வான். அதற்கு மாறாக, தேவன் நீதி, ஞானம், அன்பு மற்றும் வல்லமை ஆகிய கிருபைகள் அனைத்திற்கும் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டியது அவசியமாகிறது. 3,20,000,000 மனிதர்களை தேவன் வருடந்தோறும், நித்திய வேதனையை அனுபவிக்கும்படி அனுப்புவதற்காக முன்னறிந்து தீர்மானிக்கிறார் என்ற தவறான கருத்தின்படி பார்க்கும்போது, நிச்சயமாக அவர் ஒரு தேவன் இல்லை என்பது மட்டுமல்லாமல், மனித மனம் கற்பனை செய்து பார்க்கக்கூடிய அளவிலான மிக பயங்கரமான பிசாசாகவே இருக்கக்கூடும்! ஒரு பெரிய தவறு நடந்திருக்கிறது என்று வேதாகம மாணாக்கர்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். அத்துடன் நாம் நினைத்திருந்தபடி, வேதாகமம் அவ்விதமான எதையும் கற்பிக்கவில்லை, தேவனுடைய வசனத்தின் சரியான பொருள் விளக்கத்தை அறிந்து கொள்ளும்படிக்கு அவர்களுடைய மனக்கண்கள் அதிகமதிகமாக திறக்கப்பட்டுக் கொண்டிருப்பதால், அவர்கள் முன்பு ஒருபோதும் இராதவகையில் தெய்வீக குணாதிசயத்தையும், வேதாகமத்தையும் மதித்துணர்ந்து பாராட்டுகிறார்கள். எஜமான் மறைமுகமாகக் கூறியவைகளில்,




ரோம. 5 : 12–19

சிலவற்றை ஆழ்ந்து ஆராய்ந்து, அவை எவ்வாறு தவறாக பொருள் விளக்கம் செய்யப்பட்டு தவறாக பயன்படுத்தப் பட்டு வருகின்றன என்பதை பின்பு விளக்கிக் காட்டுவோம். இந்த கட்டுரையில் கொடுக்கப்பட்டுள்ள பாடத்துடன் நம்மை திருப்திப்படுத்திக் கொள்வோம். புறமதஸ்தருக்கும், சிறு பிள்ளைகளுக்கும் உள்ள தேவனுடைய உறவை நாம் ஆராய வேண்டும்.

*“தெரிந்து கொள்ளப்பட்ட குழந்தைகள், குழந்தைப் பருவத்தில் மரிக்கும்போது இரட்சிக்கப்படுகிறார்கள்”* என்று முன்பு வாசிக்கப்பட்டுவந்த விசுவாசப் பிரமாணத்தின் வாக்கியத்தில் நம்முடைய பிரஸ்பிட்டேரியன் நண்பர்கள் “தெரிந்துகொள்ளப்பட்ட” எனும் வார்த்தையை எடுத்து விட்டு, அதனை, *“குழந்தைகள், குழந்தைப்பருவத்தில் மரிக்கையில் இரட்சிக்கப்படுகிறார்கள்”* என்று மாற்றிய மைத்து வாசிக்கும்படிச் செய்துவிட்டனர் என்று நாம் அறிந்து கொள்கிறோம். ஆனால், இது உண்மைதானா? நம்முடைய பிரஸ்பிட்டேரியன் நண்பர்கள் இதனை நம்புகிறார்களா? வாருங்கள், நாம் ஒன்று சேர்ந்து இதன் காரணத்தை ஆராய்வோம். ஆதாமின் குடும்பத்திலுள்ள குழந்தைகளும், அதைப் போலவே முழு வளர்ச்சியடைந் தவர்களும் பாவத்தில் பிறந்து, அக்கிரமத்தில் உருவாக்கப் படவில்லையா? இவர்கள் எல்லோரும் சுபாவத்தினால் “**கோபாக்கினையின் பிள்ளைகளாய்**” இருக்கவில்லையா? ஆதாமின் குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் “**நீ சாகவே சாவாய்**” என்ற, அவனுடைய பாவத்தின் தண்டனை அல்லது சாபத்தின் கீழ் இருக்கிறார்கள் அல்லவா? குழந்தைகள் மரிப்பதற்கு இதுவே காரணமாக அமைய வில்லையா? பாவம் இல்லாதிருந்தால் மனுக்குலத்தில் மரணமே இருந்திருக்காதல்லவா? இதைக் குறித்து, “**இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று**”? (ரோம.5 : 12; சங். 51 : 5) என்று பரி. பவுல் மிக சிறப்பாக அறிவிக்கவில்லையா? சந்தேகமின்றி அவர் அறிவிக்கிறார்.


## தண்டனைக்குட்பட்ட அனைவருக்கும் மீட்பு தேவை

நிச்சயமாகவே, எல்லா கிறிஸ்தவ ஜனங்களும், விசேஷமாக பிரஸ்பிட்டேரியன்களும் தகப்பனாகிய ஆதா மின்மீது விதிக்கப்பட்ட மரண தண்டனையை அவனுடைய சந்ததி மரபுரிமையாகப் பெற்றுக் கொண்டபடியால், அவனுடைய சந்ததியில் முதியவரோ அல்லது இளைய வரோ எவரும் தண்டனையிலிருந்து விடுவிக்கப்படுவதற்கு முன்பு கடன் தீர்க்கப்பட்டு, ரத்து செய்யப்பட வேண்டியதும் அவசியமாயிருக்கிறது என்பதை ஒத்துக் கொள்வார்கள். உண்மைதான், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மரணம் மீட்கும்பொருள் கிரயமாயிருக்கிறது என்றும் அதை அவர் பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே ஏற்படுத் தினார் என்பதையும் நாம் அனைவரும் ஒத்துக் கொள்ளு கிறோம். ஆனால் இயேசுவின் மரணம் மட்டுமே ஒருவரையும் இரட்சிப்பதில்லை என்பதையும் கூட நாம் ஒத்துக்கொள்ளவில்லையல்லவா, அதாவது அப்படிப்பட்ட காலத்தில் அவருடைய புண்ணியம், சபைக்கு மட்டும் அவர்கள் அதில் விசுவாசமாயிருந்து அதனை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு அதனை உரித்தாக்கிக் கொண்ட தால் அவர்களுக்கு மட்டுமே சாட்டுதல் செய்யக் கூடியதாயிருந்ததல்லவா? விசுவாசியுங்கள்! விசுவா சியுங்கள்! என்பதே சுவிசேஷ யுகத்தின் அறிவிப் பாயிருந்ததல்லவா? அவர்கள் விசுவாசத்தால் நீதிமான் களாக்கப்பட்டார்களே அல்லாமல், குழந்தைகளாய் இருப்பதால் அல்ல, என்கிற வேதாகம அறிவிப்பை நாம் நினைவிற்கொள்கிறதில்லையா? மேலும் ஏறக்குறைய வளர்ச்சியடைந்த மனதையுடையவர்கள் தவிர வேறெ வராலும் விசுவாசத்தைப் பயிற்சி செய்ய முடியாது என்பதை நாம் எல்லாரும் ஒப்புக் கொள்கிறதில்லையா? வேதாகமத்தில் அறிவிக்கப்பட்டுள்ள திட்டப்படி எல்லா குழந்தைகளும் ஆதாமின் மரண ஆக்கினைத் தீர்ப்பில் பங்கடைந்தவர்களாயிருக்கிறார்கள் என்றும் இயேசுவின் மீட்பின் வேலையில் அவர்களுக்கான ஏற்பாடும் இருக்கிறது என்பதையும் எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டும். அப்படியிருப்பினும் அவர்கள் தேவனையும், இயேசு வையும் பற்றிய அறிவை அடையும் நிலைக்கு வந்த பின்பு விசுவாசம், கீழ்ப்படிதல் முதலியவற்றை அவர்களால் முடிந்த அளவுக்கு பயிற்சி செய்வதால் மட்டுமே இரட்சிக் கப்படமுடியும். இது விவாதம் செய்ய அவசியமில்லாத காரியம் என்று நாங்கள் நம்புகிறோம். இது அப்படி இருக்கும்போது குழந்தைப் பருவத்தில் மரிக்கிற குழந்தைகள் யாவரும் இரட்சிக்கப்படுகிறார்கள் என்று நம்முடைய பிரஸ்பிட்டேரியன் சகோதரர்கள் சொல்லும் போது, அவர்கள் அக்கருத்தை மிகைப்படுத்திக்கூறுகி றார்கள். அவர்கள் மிகச்சரியாக சொல்லலாம், குழந்தைப் பருவத்தில் மரிக்கிற குழந்தைகளும் மற்றும் ஒவ்வொரு வரும் இரட்சிக்கப்படுவதற்கு கிறிஸ்துவிலுள்ள தேவ

தயவின் கீழ், வந்து சேர்ந்து அவர்கள் அனைவரும் சத்தியத்தை அறிகிற அறிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்பு இரட்சிக்கப்படுவார்கள். அவ்வாறு, கர்த்தரையும், இரட்சிப்பின் நிபந்தனைகளையும் அறிந்து கொள்ள, கொண்டு வரப்படும் போது, அதன் முடிவுகள் அவர்களைப் பொறுத்ததாகவே அமைந்திருக்கும். அவர்கள் ஏற்றுக் கொள்வார்களானால், அவர்களுக்கு அளிக்கப்படும் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வார்கள். அவர்கள் மறுப்பார்களானால், அவர்கள் இரண்டாம் மரணத்தை அனுபவிப்பார்கள்.

மனுக்குலமனைத்தும் தேவனுடைய சாபம் அல்லது மரண ஆக்கினைத்தீர்ப்பின் கீழிருக்கிறது. நித்திய வேதனையின்கீழ் அல்ல என்று வேதாகமம் போதிப்பதைப் பற்றி நாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். குறித்த காலத்தில் "**கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்.**" அவருடைய சிலுவை மரணத்திற்கு முன் வாழ்ந்தவர்களுக்காகவும், அதற்கு பின்பு பிறந்தவர்களுக்காகவும், சகல தேசங்களிலுமுள்ள வெள்ளை, கருப்பு, பெரியவர்கள், இளையவர்கள் ஒவ்வொருவருக்காகவும் மரித்தார். இந்த பொதுவான மீட்பின் காரணமாக, சாபம் அல்லது மரண தீர்ப்புடன் இணைந்து பரவியிருக்கிற மரணத்துக் கேதுவான சாபத்திலிருந்து மீட்பு பெறுதல் அவசியமாயிருக்கிறது. மரணதண்டனையிலிருந்து மனுக்குலத்தார் அனைவரும் விடுதலையை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு ஆயத்தமாகும்படி பாவத்திலிருந்தும், மரண நிலைமைகளிலிருந்தும் பரிபூரண ஜீவனுக்குரிய நிலைமைகளுக்கு உயிர்த்தெழுந்து வர சந்தர்ப்பம் பெற்றவர்களாக இருக்கிறார்கள். இந்த தேவனுடைய கிருபையை மனப்பூர்வமாகவும், அறிவால் உணர்ந்து புறக்கணிக்கிறவர்கள் மட்டுமே இரண்டாம் மரணத்தில் மரணமடைவார்கள் – அவர்கள் இனி ஒருபோதும் இராதவர்கள் போல அறுப்புண்டு போவார்கள் – இயற்கையான மிருகங்கள் போல அழிந்து போவார்கள். (2 பேது. 2 : 12).

இந்த நோக்கிலிருந்து பார்க்கும்போது, இன்னும் ஒருவரும் இரட்சிப்பை அடையவில்லை என்று அறிகிறோம். சிறு குழந்தைகள், பெரியவர்கள், புறமதஸ்தவர், கிறிஸ்தவர்கள், அனைவரும் ஷியோல்–Sheol, ஹேட்ஸ் – Hades, கல்லறை எனும் மரண நிலைக்கு போகிறார்கள். எல்லாரும் ஷியோல், ஹேட்ஸ், கல்லறையில் புதிய நேமகமாகிய மேசியாவின் மகிமையான ராஜ்யத்தின் மகிமையான காலைப்பொழுதுவரை நித்திரையிலிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பரலோக மகிமைகள், கனங்கள் மற்றும் தெய்வீக சுபாவத்தைப் பெற்றுக் கொள்ள உயிர்த்தெழுந்துவரும் முதல் வகுப்பாக சபை தேர்ந்தெடுக்கப்படும். அதைத் தொடர்ந்து சபையானது, தன்னுடைய கர்த்தருடன் ராஜாக்களாகவும், ஆசாரியர் களாகவும், எல்லா யுகங்களிலுமுள்ள தேசங்களின், இனங்களான மனுக்குலத்தார் அனைவரையும் ஆசீர்வதிப்பதற்காக ஆட்சி செய்வார்கள். வேறுவிதமாகச் சொன்



இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் நியாயத்தீர்ப்பை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். [நியாயத்தீர்ப்பு என்பதே சரியான மொழிபெயர்ப்பு. (யோவா. 5 : 28, 29)]

னால், இயேசு பூமியில் இருந்தபோது ஒருவரும் பரலோகத்துக்கு போகவில்லை. "**பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை**" என்று இயேசுவானவர் கூறியுள்ளார். (யோவா. 3 : 13). ஆகவே பரலோகத்தில் குழந்தைகள் எவரும் இல்லை. மரித்துப்போன குழந்தைகள் எல்லாரும் வேதாகம நரகமான, கல்லறைக்கு சென்றிருக்கிறார்கள், "**அவர்கள் ஒன்றும் அறியார்கள்**" – அவர்கள் ராஜ்யம் வல்லமையோடு வருகிற காலத்திற்காக மட்டுமே காத்திருக்கிறார்கள், விழித்தெழச் செய்யும் நடைமுறைகள் அப்போது செயல்படத் தொடங்கும்; அப்பொழுது அவர்கள் மரணத்திலிருந்து எழுந்து வருவார்கள் – அவனவன் தன் தன் வரிசை அல்லது வகுப்பின்படி வருவான். (1 கொரி. 15 : 23; யோவா. 5 : 28, 29).

வேதாகமம் அடிப்படை இல்லாத மற்றொரு இறையியல் கொள்கை உள்ளது. அது, ஒவ்வொரு குழந்தையும் சாவாமை பெற்றுள்ளது என்பதாகும். எனவே தற்கால ஜீவியம் நீண்டதோ அல்லது குறுகியதோ, அனுகூலமானதோ அல்லது அனுகூலமற்றதோ எப்படிப்பட்டதாயிருந்தாலும், நம்முடைய குணாதிசயங்களை சீர்திருத்திக் கொண்டு, சந்தோஷமான நித்தியத்திற்கு தகுதிபெற ஒரேயொரு வாய்ப்பை அனுபவிக்க உருவாக்குவதாயிருக்கிறது என்று கூறுகிறது. ஆகவே வேதாகமத்திற்கு புறம்பான இந்த கொள்கையின்படி, அவிசுவாசிகளின் பிள்ளைகள் மற்றெல்லா மனுக்குலத்தாரையும் போல, பாவத்திலும், ஒழுக்க சீர்கேட்டிலும் கர்ப்பந்தரிக்கப்பட்டு பிறந்தவர்கள், ஏறக்குறைய ஆசீர்வாதமான ஒரு நித்தியத்துக்கு ஆயத்தமில்லாதிருப்பதால், அதன் விளைவாக அந்த நித்தியத்தை வேதனையிலும், பெரும்பயத்திலும் கழித்தாக வேண்டும். ஆனால் இந்த தவறான கொள்கையை நம் மனதிலிருந்து தூக்கி எறிந்துவிட்டு, வேதவாக்கியத்தின்படி மட்டுமே செல்வோம். தேவனுடைய வசனம் சொல்கிறபடி, "**தேவன் ஒருவரே சாவாமையுள்ளவர்.**" ஆகவே குழந்தைகள் யாருமே சாவாமையுள்ளவர்களல்ல. "**பாவஞ் செய்கிற ஆத்துமா சாகும்**" என்று தேவன் சொன்னபோது அவர் இதனை உறுதிப்படுத்தினார்;

ஆதாமுக்கும் அவன் சந்ததிக்குமுள்ள தண்டனை மரணமாகும். எனவே பிள்ளைகளும், மற்றெல்லாரும் ஆதாமின் பாவத்தினால் மரிக்கின்றனர். அவிசுவாசிகளுடைய பிள்ளைகளுக்கு நிகழக்கூடிய மிக மோசமான காரியம் மரணமாகத்தான் இருக்கிறது. அவிசுவாசிகளுடைய பிள்ளைகளுக்கு வேதாகமம் கூறும் நம்பிக்கை என்ன? பரிசுத்தவான்களின் பிள்ளைகளுடையதைப் போலவே அது மிகச் சரியாக அவர்களுக்கும் இருக்கிறது; எல்லோரும் ஆதாமுடைய மரணாக்கினைத்தீர்ப்பின் கீழ் இருக்கிறோம். நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசு ஆதாமுக்காக மரணத்தை ருசிபார்த்தபோது, எல்லாருக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார். ஒரே மனுஷனுடைய பாவம் எல்லோர் மேலும் மரணத்துக்குரிய தண்டனையைக் கொண்டுவந்தது; ஆகையால் ஒரே மனுஷனுடைய மீட்கும் பொருள் எல்லோருக்குமுரிய மீட்கும் பொருளாயிற்று. அவிசுவாசிகளின் பிள்ளைகள் மிகச்சரியான முறையில் மரண ஆக்கினையிலிருந்து முழுவதுமாக மீட்கப்பட்டிருக்கிறார்கள். உண்மையில், வேறெவருமல்ல பாவிகளே மீட்கப்பட்டிருக்கிறார்கள். "**கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்.**" எல்லோருமே அக்கிரமக்காரர்கள்; எல்லோருமே பாவிகள்; ஆகவே எல்லோரும் மரிக்கிறோம்; எனவே எல்லோரும் மீட்கப்பட வேண்டியதிருக்கிறது, இல்லையெனில் அவர்களுக்கு உயிர்த்தெழுதலுக்கான நம்பிக்கை இருக்காது.

மேசியாவின் ராஜ்யத்தில், உயிர்த்தெழுதலின் யுகத்தில், அவிசுவாசிகளின் பிள்ளைகளைக் காட்டிலும் விசுவாசிகளின் பிள்ளைகள் முன்னேற்றத்திற்கான வழிவகைப் பெற்றிருப்பார்கள். அதாவது அவர்கள் விழித்தெழும்பும்போது குறைந்த அளவிலேயே சீர்கெட்ட கூறுகளைப் பெற்றிருப்பார்கள். பிரம்மாண்டமான அந்த உயிர்த்தெழுதல் வேலை அப்போது கிரியை செய்யும்போது அந்த குறைபாடுகள் வெகு சீக்கிரத்தில் வெற்றி கொள்ளப்படும். விருப்பமுள்ளவர்களும், கீழ்ப்படிகிறவர்களும் சத்தியத்தைப் பற்றிய முழுமையான அறிவுக்கும், நிறைவான திரும்பக்கொடுத்தலின் முழுமையான சந்தர்ப்பங்களுக்கும், ஆதாம் அவனுக்காகவும், அவனது சந்ததிக்காகவும் அவனுக்குள் இழந்துவிட்ட எல்லாவற்றையும், மீண்டும் பெற்றுக்கொள்ள கொண்டுவரப்படுவார்கள். அந்நாட்களில், "**பிதாக்கள் திராட்சக் காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின**" என்று சொல்ல மாட்டார்கள். "**அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான்.**" "**பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்.**" எரே. 31 : 29, 30; எசே. 18 : 2-4.

தேவனுடைய வழிகள் எவ்வளவு நியாயமானவைகள்! எவ்வளவு வெளிப்படையாக அவை வசனத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன! விசுவாசமுள்ள கண்களும், காதுகளும் உடையவர்கள் எவர்களோ, இருண்ட யுகங்களின் செத்த விசுவாசப்பிரமாணங்களை விட்டுவிட்டு




"ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" ஆதி. 2 : 17.

ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தைக்கு யாரெல்லாம் செவிகொடுக்கிறார்களோ, அவர்கள் மற்றவர்கள் அறியாத பெலத்தின் ஊற்றான மனசந்தோஷமும், சமாதானமும் பெற்றிருப்பார்கள். தேவனுடைய ஏற்பாட்டின்படி பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு பொறுப்பாளிகளாயிருக்கிறார்கள். மனசாட்சியுள்ள பெற்றோர் தங்களுடைய குழந்தைகளை கர்த்தரைப் பற்றிய நல்லறிவு புகட்டுவதிலும், பேணிவளர்ப்பதிலும் பயிற்சி கொடுக்க அற்புதமானதொரு சந்தர்ப்பத்தைப் பெற்றிருக்கிறார்கள். கிறிஸ்தவ பெற்றோர் எல்லா சூழ்நிலைகளின் கீழும் மிகுதியாக சோதனையிலும்கூட, தங்களுடைய கடமைகளை சரியாக நிறைவேற்றத்தக்கவர்களாயிருக்கும்படி பரத்திலிருந்து வருகிற ஞானத்திற்காக மிகவும் வாஞ்சையுடன் நாடித்தேட வேண்டும். அப்போஸ்தலன் நம்முடைய பாடத்தில் விசுவாசிக்கிறவர்களுடைய பிள்ளைகளுக்கும், அவிசுவாசிகளின் பிள்ளைகளுக்கும் இடையேயுள்ள தெளிவான வேறுபாட்டை எடுத்துச்சொல்கிறார். அவிசுவாசிகளின் பிள்ளைகள் தேவனுடன் எவ்வித உறவும் கொண்டிராதவர்கள் என்றும் அவரிடமிருந்து எவ்வித மேற்பார்வையும் பெற்றிராதவர்கள் என்பதே அவருடைய வாதமாயிருக்கிறது; அதே சமயத்தில் விசுவாசிகளின் பிள்ளைகளோ, பெற்றோர் மூலமான உறவினால், தெய்வீக மேற்பார்வை மற்றும் பாதுகாப்புக்குட்பட்டவர்களாயிருக்கின்றனர். இவர்களுக்கும், அவர்களுடைய பெற்றோரைப் போலவே சகலமும் நன்மைக்கேதுவாக அவர்களுடைய நலனுக்காகவே நடக்கிறது. அவர்களுடைய பெற்றோருடைய சித்தத்தின்படியான இந்த தெய்வீக மேற்பார்வை, அந்த தனிப்பட்ட பிள்ளை அறிவு முதிர்ச்சியும் பொறுப்புணர்வும் கொண்ட வயதை அடையும்போது முடிந்துவிடுகிறது. அதன் பின்பு அவர்கள் தேவனுடன் தனிப்பட்ட முறையிலான உறவுக்குள்ளாக பிரவேசிக்க வேண்டும்; அல்லது மீதமுள்ள உலகத்தாரைப் போல, அவருடன் எந்த தொடர்பும் இல்லாமல் புறம்பே இருப்பவர்களாக, அவர் பூமியின் மீது ஆளுகை செய்கிற, ஆயிரம் ஆண்டு காலமான கிறிஸ்துவின் நாள் மட்டும் எந்த தொடர்பு மில்லாமல் புறம்பே இருக்க வேண்டும். ***

# நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்

**Whereas I Was Blind Now I See** யோவான் 9 : 1-41

**கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்**
**சங்கீதம் 23**

**நான் தாழ்ச்சியடையேன். அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார். அவர் என் ஆத்துமாவைத் தேற்றி தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.**

**நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.**

**என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர். என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.**

**என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும். நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.**

கிழக்கத்திய நாடுகளில் பயணம் செய்கிற ஒவ்வொருவரும் அங்கே, ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிலிருப்பதைக் காட்டிலும் மிக அதிக அளவில் குருட்டுத் தன்மை சாதாரணமாகக் காணப்படுகிறது என்ற உண்மையை தங்களுடைய கவனத்தில் எடுப்பது நிச்சயம். இந்த கருத்தை அமெரிக்கானா கலைக்களஞ்சியம் (The encyclopedia Americana) அட்டவணையிட்டு காட்டுகிறபடி பார்வையற்றோரின் விகிதாச்சாரம் 1870-ல் அமெரிக்காவில் 1900 பேருக்கு ஒன்றாகவும், ஐரோப்பாவில் அவ்விகித அளவு குறைவாக, அதாவது 1094 பேருக்கு ஒன்று என்ற விகிதத்திலும்; சீனாவில் சராசரி மக்கள் தொகையில் 400 பேருக்கு ஒன்று என்ற விகிதத்திலும் இருந்தது. இக்காரியத்தை குறைவின்றி கற்றுத் தேறிய முனைவர் கீய்கீயின் கருத்துப்படி, 20 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் எகிப்தின் மக்கள் தொகையில் ஒவ்வொரு 100 பேருக்கு ஒரு பார்வையற்றவன் என்ற கணக்கில் இருந்தனர். எகிப்துக்கு அருகிலிருக்கும் பாலஸ்தீனத்தில், அது போன்ற சூழ்நிலைகள் இருந்ததாகவும், அதிலும் விசேஷமாக வளர்ச்சியடையாமல் கீழ்நிலையிலிருந்த வகுப்பாரின் மக்கள் தொகையில் பாதிக்கு மேல் அநேகர் பார்வையற்றவர்களாகவும் அதேபோல 200 பேருக்கு ஒன்று என்று பயங்கரமான பெரிய விகிதத்தில் அநேகர் இருந்ததாக கருதப்படுகிறார்கள்.

“மேற்கத்திய நாடுகளில் நாங்கள் அரிதாகவே உணரக்கூடிய பார்வையின்மை பாலஸ்தீனத்தில் குறிப்பிடத்தக்க விகிதத்தில் சாதாரணமானதாக இருக்கிறது. “உலகில் எகிப்தைத்தவிர இந்த பாதிப்பு இந்த அளவுக்கு பரவியிருக்கிற வேறொரு நாடு அநேகமாக இருக்காது. உதாரணமாக, காஸாவின் மக்கள் தொகையில் மூன்றிலொரு பாகத்தினர் தங்களின் ஒரு கண்ணையோ அல்லது இரண்டு கண்களையோ இழந்திருக்கின்றனர்; ஆனால் இப்படிப்பட்டவர்களிடையே பிறவிக் குருடராய்ப் பிறந்தவர்களைக் கண்டுபிடிப்பது கடினமாக உள்ளது” என்று இந்தக் காரியத்தைப் பற்றி கேனன் டிரிஸ்ட்ரம் என்பவர் எழுதியிருக்கிறார்.

இந்த குருட்டுத்தன்மை, பெரும்பாலும் தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாகவும், குழந்தைகளை கவனிக்காமல் விட்டுவிடுவதால், அவர்களுடைய கண்கள் ஈக்களால் பாதிக்கப்பட்டதன் விளைவாகவும் ஏற்பட்டிருக்கிறது.

தற்போதய புள்ளிவிவரம்: உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின்படி 45 மில்லியன் ஜனங்கள் குருடராயிருக்கிறார்கள். ஆப்பிரிக்கா போன்ற வளர்ந்து கொண்டிருக்கும் நாடுகளில் போதிய மருத்துவ வசதி மற்றும் கல்வி அறிவு குறைவு, சுகாதாரமில்லாத நிலைகள் காரணமாக 87% பார்வைத் திறன் குறைவுள்ள மக்கள் வாழ்ந்து வருவதாக அறிக்கை தெரிவிக்கிறது. 60-80% குழந்தைகள் குருடாகி, ஒன்று, இரண்டு வருடங்களுக்குள்ளாகவே இறந்துவிடுவதாகவும் நம்பப்படுகின்றது. அதிகரித்துவரும் வாழ்க்கையின் எதிர்பார்ப்புகள் மற்றும் வளர்ந்து வரும் மக்கள் தொகைப் பெருக்கம் காரணமாக பார்வை இழப்பின் அளவு திட்டமாக உலகம் முழுவதும் அதிகரித்து வருகிறது.

யோவான் 9 ஆம் அதிகாரத்தில் நம்முடைய கவனத்துக்கு கொண்டுவரப்பட்ட அற்புதமானது, நமது கர்த்தரால் குணப்படுத்தப்பட்ட மற்ற ஐந்து நிகழ்வுகளில் இருந்து வேறுபடுவது வேத வாக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது, அதாவது இந்த மனுஷன் குருடனாகவே பிறந்தவன். நமது கர்த்தருடைய காலத்தில் இப்போதிருக்குமளவுக்கு அறுவை சிகிட்சை அறிவியல் முன்னேறியிருக்கவில்லை, அத்துடன் இங்கே குணமாக்கப்பட்டவரால் சொல்லப்பட்டதைப் போல, இந்த குணமாக்குதல்

ஒரு அதிசயமாகவும், இதுவரை இது போன்ற ஒரு காரியத்தைக் கேள்விப்பட்டதே இல்லாததாகவும் இருந்தது. ஒப்பிட்டுப் பார்க்கையில் பிறவிக் குருடர்களில் சொற்ப மானவர்களே வெற்றிகரமான அறுவை சிகிட்சை செய்து பார்வை பெற்றதாகக் குறிப்புகள் உள்ளன. ஆகையால் அப்படிப்பட்ட குருட்டுத்தன்மையை நம்முடைய கர்த்தர் எளிய வழிமுறையைப் பயன்படுத்தி சுகமாக்கியது இந்நாளிலும் கூட தனிச்சிறப்பு வாய்ந்த அற்புதமாகவே இருக்கிறது. அப்படியே அந்த நாளிலும் அது இன்னும் அதிக சிறப்பானதாக இருந்திருக்கும்.


யோவான் 9
இயேசு பார்வையற்ற மனிதனை சுகமாக்குகிறார்

## கீழைநாட்டு மரபு, மார்மனிஸம், பிரம்மஞானம்

யோவா. 9 : 2-ல் இவன் குருடனாய்ப் பிறந்தது இவன் செய்த பாவமா அல்லது இவன் பெற்றோர் செய்த பாவமா என்று அப்போஸ்தலர்கள் எழுப்பிய கேள்வி, அவர்களிடம் காணப்பட்ட மிகுந்த பேதமையையோ, அந்த மனிதன் அவனுடைய பிறப்புக்கு முன்பதாக பாவஞ் செய்திருக்க முடியாது என்பதை காண்பதற்கில்லை என்பதையோ அல்லது இந்தியாவைப் போன்ற சில தூரக் கிழக்கத்திய நாடுகளின் சில அர்த்தமற்ற கருத்துக்கள் – யூதர்களை வந்து சேர்ந்திருக்கலாம் என்பதை குறிப்பாக உணர்த்துகிறது. அவைகளில் ஒன்றாக இருந்ததும், இப்போதும் இருக்கிறதான ஒன்று என்னவெனில் உலகத்தில் பிறக்கிற ஒவ்வொரு பிள்ளையும் முந்தைய ஜீவியத்தை (முன் ஜென்மத்தைக்) கொண்டதாயிருக்கிறது என்றும் அதில் அது செய்த நன்மை அல்லது தீமைக்குத் தக்க வெகுமதிகள் அல்லது தண்டனைகள் சார்பாக தற்போதைய ஜீவியத்தின் நிலைமைகள் அமைந்துள்ளது என்பதுமாகும். இந்த அபத்தமான காரியம், கிறிஸ்தவ தேசங்களிலும்கூட பிரம்ம ஞானிகள் (தெய்வீக ஞானம் பெற்றவர்கள்) என்று அழைக்கப்படுகிறவர்களாலும், “மார்மன்ஸ்” மற்றும் பிறர்களாலும் புத்துயிர்பெற்று வருகின்றன. அப்படிப்பட்ட கோட்பாடு வேதாகமத்தின் எந்த வாக்கியத்துடனும் எவ்வித ஆதாரத்தையும் பெற்றிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுவது இங்கே அவசியமானதாக இல்லை. இதற்கு முற்றிலும் எதிராக வேத வாக்கியங்கள் மிகவும் உறுதியாக முரண்பட்டு, மனுஷனுடைய சிருஷ்டிப்பு தேவனுடைய நேரடியான சிருஷ்டிப்பு என்றும், முற்காலத்தில் வாழ்ந்திருந்த சில ஜீவிகள் மீண்டும் மறுபிறவியாக பிறக்கவில்லை என்றும் அறிவிக்கின்றது. வேதாகமம் முழுவதும் இந்த எண்ணம் உறுதியாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இதிலிருந்து பிள்ளை அதன் ஜீவனை அதனுடைய தகப்பனிடமிருந்து பெற்றுக் கொள்வதுடன், அவனுடைய ஜீவிய நடைமுறைப்படி நன்மையை அல்லது தீமையை சுதந்தரித்துக் கொள்கிறதே அல்லாமல், முந்தின நிலையிலோ அல்லது வேறொரு உலகத்திலோ வாழ்ந்த அதனுடைய ஜீவிய நடைமுறைப்படியல்ல என்பது நமக்குத் தெளிவாகச் சொல்லப்படுகிறது. பிதாக்களின் அக்கிரமங்களைப் பிள்ளைகளிடத்திலும் மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும் விசாரிப்பதாகவும், தம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கஞ் செய்கிறவராயிருப்பதாகவும் தேவன் அறிவிக்கிறார். (யாத். 20 : 5, 6; உபா. 5 : 9, 10).

இந்த பரம்பரைப் பண்பு, நாம் காண்கிறபடி, இயல்பான ஒழுங்கின் வழியிலேயே வருகின்றது. பாவமான மனப்பான்மை நற்குணப் பண்புகளை உடைத்துப் போடுவது மட்டுமல்லாமல், உடல் அமைப்பு சார்ந்தவைகளையும் பழுதடையச் செய்து, வலிமை இழக்கச் செய்கிறது. அதே சமயத்தில் தேவபக்தி, பாவத்தின் சீர்கேடுகளைச் சரிப்படுத்தி, நலமளிக்க முடியாது எனினும் அவைகளைத் தடுத்து, கட்டுப்பாடான அளவில் வைத்துக் கொள்கிறது. வேத வாக்கியங்கள் (ரோம. 5 : 12)–ன்படி, “**இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே** (பாவத்தின் பலனாக) **மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும்,** (அவனுக்குள்ளாக) **எல்லா மனுஷரும் பாவஞ் செய்தபடியால்** (பாவிகளானதால்) **மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று**” – பரம்பரை மூலமாக என்று கூறுவதின் மூலமாக மறுபடியும் மறுபிறவி கொள்கைக்கு எதிரான கருத்தைத் தெரிவிக்கிறது. மேலும் பரம்பரையினால் இருக்குமானால், கீழை நாட்டு மரபு, மார்மனிஸம், பிரம்மஞானம் அறிவிக்கிறபடி – அந்த பிள்ளையின் முந்திய ஜீவியத்தின் சில விளைவுகள் மற்றும் அதன் பங்கிலுள்ள பாவத்தாலும் அல்ல என்பதாகும்.

மீட்கும் பொருள் உபதேசம் இந்த காரியம் முழுவதையும் ஐயமின்றி தீர்த்து வைக்கிறது என்பதை நாம் அனைவரும் எளிதில் கண்டு கொள்ளலாம். நாம் இந்த உலகத்தில் இப்போது நம்மிடத்திலுள்ள குறைகளுடன்

பிறந்திருப்பது, முந்தைய வாழ்வின் போது செய்யப்பட்ட சில பாவங்களின் விளைவுகளாக இருந்திருக்குமானால், நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் மரணம் அவற்றை நீக்கியிருக்க முடியாது. மீட்கும் பொருள் உபதேசமும் தவறு என்று நிரூபிக்கப்பட்டிருக்கும். ஆதாம் அவனுடைய சிருஷ்டிப்பில் பூரண மனுஷனாயிருந்தான். ஆகையால் அவனுடைய பாவமும், மரண தண்டனையும் இயல்பான பிறப்பு வழிமுறை மூலமாக அவனுடைய சந்ததி அனைத்துக்கும் கடந்து வந்தது என்ற உபதேசம் மீட்கும் பொருள் உபதேசத்துடன் மாற்ற முடியாதபடி இணைந்துள்ளது. நம்முடைய கர்த்தராகிய இயேசுவால் கொடுக்கப்பட்ட மீட்கும்பொருள் ("சரி நிகரான விலைக்கிரயம்")என்பது ஒரு மனுஷனுடைய ஜீவனுக்கான மனுஷ ஜீவனாக இருந்தது; அதாவது மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. (1 கொரி. 15 : 21). நமது கர்த்தருடைய ஈடுபலி தகப்பனாகிய ஆதாமின் பாவத்துக்கான முழுமையான சரி நிகர் விலைக்கிரையமாகவும், ஈடுசெய்வதாகவும் இருப்பதால், அதன்படி அவனுடைய சந்ததியில் வெளிப்படுகிற அவனுடைய பாவத்தின் விளைவுகள் அனைத்தையும் ஈடுசெய்கிறது. "**அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்**" (1 பேது. 3 : 18) மரித்த கிறிஸ்துவின் ஒரே பலியின்மூலம் நாமெல்லாரும் மீட்கப்பட்டோம்.

## எல்லா வியாதிகளும் பிசாசினால் வருபவைகளா?

பெருமளவில் எண்ணிக்கையில் அதிகரித்து வரும் கிறிஸ்தவர்கள் – எல்லா மருந்துகளையுமே ஏற்க மறுக்கிறவர்கள் உட்பட எல்லாருமே, வியாதிகள் அனைத்தும் பாவம் மற்றும் பிசாசின் கிரியைகளின் நேரடியான விளைவாயிருக்கிறது என்றும், தேவ பயத்துடன் ஜீவிப்பது வியாதிப்படுவதை தடுக்கும் என்னும் முடிவுக்கு வருகின்றனர். மருந்துகள் பயன்படுத்தப்படவே கூடாது என்றும், ஆனால் அதற்கு மாறாக அந்த வியாதி எந்த பாவத்திற்கான தண்டனையாக வந்தது என்றறிந்து அது மன்னிக்கப்பட தேவனிடத்தில் ஜெபம் ஏறெடுக்கப்பட வேண்டும் என்றும், மனஸ்தாபப்பட்டதற்கும், விசுவாச பயிற்சிக்கும் வெகுமதியாக அந்த வியாதி குணப்படுத்தப்படும் என்றும் அவர்கள் நம்புகின்றனர்.

> **தேவனுடைய சித்தமே செய்யப்பட வேண்டும் என்று நாம் வேண்டிக் கொள்ளும்படி விரும்புகிறார்.**
>
> "**நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் ...... அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்.**"
>
> **1 யோவா. 5 : 14, 15.**

இந்த கிறிஸ்தவ நண்பர்கள் எப்படி இந்த பாடத்தை நோக்குகிறார்கள் என்று நாம் அதிசயிக்கிறோம். இயேசுவின் சீஷர்களைப் போலவே, அவர்களும் பிறவிக் குருடன் ஒருவன் இந்த முறையில்தான், பாவத்தின் காரணமாக பிறந்திருக்க வேண்டும் – அவனுடைய சொந்த பாவம் இல்லையெனில், அவனுடைய பெற்றோரின் பாவத்தின் காரணமாக இருக்கும் என்று முடிவு செய்கின்றனர். இந்த நோக்கு நிலையிலிருந்தே எல்லா நோய்களுக்குமான காரணத்தை அவர்கள் தீர்மானிக்கின்றனர். அவர்கள் இந்த கருத்தைப் பற்றிய தங்கள் முடிவுகளைக் குறித்து மிகுந்த திருப்தி கொண்டிருப்பதால், அவர்கள் அப்போஸ்தலர்கள் செய்ததுபோல கர்த்தரிடம் விசாரிப்பதில்லை. மேலும் அவன் செய்த பாவத்தினாலுமல்ல, அவனுடைய பெற்றோருடைய பாவத்தினாலுமல்ல என்று இங்கு கொடுக்கப்பட்டுள்ள அவருடையப் பதிலைக் கேட்கவுமில்லை.

அவர்கள் வேத வசனத்தைப் படிக்கிற மாணவர்களாயிருந்தால், பேரழிவுகள் எப்போதுமே பாவங்களுக்கான தண்டனைகளாயிருப்பதில்லை என்று தெளிவாகச் சுட்டிக்காட்டுகிற எண்ணற்ற வேத வாக்கியங்களை அவர்கள் கவனித்திருப்பார்கள். உதாரணமாக நம்முடைய கர்த்தர் கலிலேயரைக் குறித்து அறிவிக்கும்போது, அவர்களுடைய இரத்தம் அவர்களுடைய பலிகளோடே கலந்திருந்ததாகவும், அவர்கள்மீது சீலோவாம் கோபுரம்விழுந்து அவர்களைக் கொன்று போட்டதாகவும் குறிப்பிடுகிறார். (லூக். 13 : 1-5). இந்த பேரழிவுகள், அதில் அகப்பட்டு துன்புற்றவர்கள் மற்ற மனுஷரைவிட அதிக பாவிகளாக இருந்தார்கள் என்று சுட்டிக்காட்டவில்லை என்று நம்முடைய கர்த்தர் தெளிவாக அறிவிக்கிறார். அதைப் போலவே, லாசருவின் வியாதி மற்றும் மரணகாரியத்தை நம்முடைய கர்த்தர் அறிவிக்கும்போது, லாசருவின் மரணம் அவனுடைய பாவத்தின் காரணமாக அல்லாமல், தேவனுடைய மகிமைக்காகவே அனுமதிக்கப்பட்டதாகச் சொல்கிறார். ஆகையால் இந்த பாடத்தில் (யோவா. 9 : 3) அந்த மனிதன் குருடனாகப் பிறந்தது அவனுடைய பாவத்தினாலல்ல, ஆனால் மாறாக, "**தேவனுடைய கிரியைகள் அவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்**" என்ற உண்மையை அவர் அறிவிக்கிறார்.

பாவமானது அடிக்கடி வியாதியைக் கொண்டு வருகிறது என்பதை நாங்கள் மறுக்கவில்லை. அதற்கு மாறாக, நாங்கள் இதனை வலியுறுத்துவதுடன், நம்முடைய கர்த்தர் குணமாக்கிய ஒருவனிடம், "**அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ் செய்யாதே**" என்று அவர் கூறிய வார்த்தைகளுடன் இதை உறுதிப்படுத்துகிறோம் (யோவா. 5 : 14). ஆயினும் வியாதிகள் அனைத்

துமே பாவத்தினாலும், பிசாசினாலும் வருகின்றன என்று சொல்வதற்கும், அவற்றில் அதிக அளவு பாவத்தினாலேயே உருவாக்கப்படுகிறது அல்லது தீவிரப்படுத்தப்படுகிறது என்று ஏற்றுக் கொள்வதற்கும் இடையே பெரியவித்தியாச மிருக்கிறது. இதைவிட மேலும் அதிகமாக கடந்து சென்று ஒரு பொதுவான வழியில் தற்காலத்திலுள்ள எல்லா கோளாறுகளும் நம்முடைய பெரிய சத்துருவாகிய சாத்தானை மறைமுகமாக அடையாளம் காட்டுவதாக ஒத்துக்கொள்ளுகிறோம். ஏனெனில், அவன் வீழ்ச்சியடை யாதிருந்தால், நம்முடைய ஆதி பெற்றோருக்கு அவன் சோதனைகளை ஏற்படுத்தாமலிருந்திருந்தால், உலகத்தில் பாவமே இல்லாதிருந்திருக்கும். அதன் விளைவான அபூரணமோ, பெருமூச்சோ, அழுகையோ அல்லது மரணமோ இராமலிருந்திருக்கும் என்று நாம் கருதலாம்.


நாம் அனுபவிக்கிற எல்லா கஷ்டங்களுக்கும் சாத்தானுடைய வல்லமையே காரணம் என்று சொல்வது முழுவதும் தவறாகும். அவன் கட்டுப்படுத்தப்பட்டு, அடக்கி வைக்கப்பட்டிருப்பதினால் நாங்கள் மெய்யாகவே மகிழ்ச்சி யடைகிறோம். ஏனெனில் நாம் பெலவீனங்களோடு பிறந்திருப்பதால், தீய குணமும் பெலவீனமும் மரபு வழியாக குறிப்பிட்ட அளவுக்கு பெறப்பட்டு பெற்றோருக்கும், பிள்ளைக்கும் இடையே மட்டுமல்லாமல் அயலகத் தாருக்கும், அயலகத்தாருக்கும் இடையிலும்கூட கிரியை செய்துவருவதையும் நாம் காண்கிறோம். நாம் நம்முடைய சித்தங்களை தீமையான காரியங்களோடு பரிவும் தொடர்பும் கொள்ள ஒப்புவிக்காதவரையில் வஞ்சிக்கிற சாத்தானுடைய வல்லமை, நம்முடைய சித்தங்களுக்கு எதிராக நம்முடைய மனங்களை மாசுப்படுத்தவும் அனுமதிக்கப்படுவதில்லை. நம்முடைய விருப்பங்களை உடைத்தெறியச் செய்யவும் அனுமதிக்கப்படுவதில்லை என்பதைக் குறித்து மெய்யாகவே நாம் சந்தோஷப்படலாம். மனிதனில் கிரியை செய்கிற வியாதியும், மரணமும் அந்தகாரப் பிரபுவின் முழுமையான கட்டுப்பாட்டின்கீழ் விடப்படவில்லை என்பதைக் குறித்தும்கூட நாம் சந்தோஷப்படலாம். சாத்தானுடைய வல்லமை மரணத் துக்கேதுவானது என்று வேத வாக்கியங்கள் அறிவித் தாலும்கூட அளவுக்கதிகமாக இந்த வல்லமையை அவன் பெற்றிருக்கவில்லை. ஆனால் தேவனுடைய கட்டுப் பாடுகள் மற்றும் வரையறைகளின்கீழ் மட்டுமே அதனை அவன் நடைமுறைப்படுத்த முடியும் என்றும்கூட நமக்கு அவை எடுத்துக்காட்டுகின்றன. இது யோபு மற்றும் அவனுடைய குடும்ப காரியத்தில் மிகத் தெளிவாக சுட்டிக்காட்டப்படுகிறது. மனுக்குலத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஆதாமினால் வந்த மரணமே சாத்தா னுடைய வல்லமை அல்லது ஆதிக்கத்திற்கு காரணமாய் இருப்பதோடு சாத்தானுடைய தந்திரங்கள் மற்றும் வஞ்சகங்களுக்கு எல்லாவற்றையும் உட்படுத்துகிறது என்று மிகச் சரியாக வேத வசனங்கள் போதிக்கின்றன. (எபி. 2 : 14).

பல்வேறு வகையான வியாதி மற்றும் பெருந்துன் பங்கள் போன்றவை பாவத்திற்கான தண்டனையாக இல்லாமல், அதற்கு மாறாக தேவன் மீது கொண்டிருக்கும் திடநம்பிக்கைக்கு பரீட்சைகளாயிருந்தன என்பதற்கு இந்த வரிசையில் யோபுவின் சரித்திரம் மற்றொரு எடுத்துக் காட்டாகும். தேவன் பேரிலுள்ள அவருடைய அன்பு அவரிடத்தில் அவருக்கிருந்த திடநம்பிக்கை, அவர் மீது வைத்திருந்த உண்மையுள்ள பற்றுதல் முதலான யோபுவின் சாட்சி நம்மிடத்தில் இருக்கிறதல்லவா? "**அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர்மேல் நம்பிக்கையா யிருப்பேன்**"(யோபு. 13 : 15). மேலும் தம்முடைய ஊழியக் காரனான யோபுவுக்கு ஆதரவாக தேவனுடைய சாட்சி இதற்கு ஒத்திருக்கிறது. யோபுவின் வியாதியும் பெருந்துன் பங்களும் பாவத்திற்கான தண்டனை என்று தவறாக எடுத்துக்காட்டிய அவருடைய நண்பர்களும் தேவனால் கடிந்துகொள்ளப்பட்டனர்.

## வியாதி முதலியவற்றிற்கான காரணங்கள்

வேத வாக்கியங்களின் அடிப்படையில் சில வியாதிகள், தண்டனைகளாக இருக்கிறபோதிலும், எல்லா வியாதிகளும் பாவத்திற்கான தண்டனைகள் அல்ல என்று நாங்கள் தீர்மானிக்கிறோம். ஆகவே கிறிஸ்தவன் வியாதி அல்லது மற்ற பெருந்துன்பங்களில் தான் அகப்பட்டிருப் பதைக் காணும்போது முதலாவது அவன் தன்னைத்தானே கர்த்தருக்கு முன்பாக ஆராய்ந்து அவனுடைய துன்பங்கள் எந்த காரணத்தினால் வந்திருக்கின்றன என்று அறிய வேண்டும்.

(1) இயற்கையின் நியமங்களை நேரடியாக மீறுதல் அல்லது அவனுடைய பகுத்தறிவை மீறுதல், உதாரணமாக



நீதிமொழிகள் (வாழ்க்கைக்கு ஒரு வழிகாட்டி)

பெருந்தீனி அல்லது உண்பதில் நிதானமின்றி தன்னுடைய உடல்நலத்திற்கு ஏற்றதல்லாத உணவுகள் என்று அறிந்திருந்தும் அவற்றை உண்ணுதல் அல்லது நல்ல நடத்தையின் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடுகளை மீறுதல், உதாரணமாக தேவனுடைய வசனம் அறிவுறுத்து கிறதற்கு மாறாக ஒரு விளக்கக் குறிப்பைத் தெரிவிப்பது (நீதி. 23 : 1, 2) போன்றவை அநேகருக்கு அழிவைக் கொண்டு வந்திருக்கிறது, அல்லது "கர்த்தருக்குள்" இல்லாத ஒருவரை விவாகம் செய்வது (1 கொரி. 7 : 39), பொதுவாக கடுமையான சிட்சைகளைக் கொண்டு வருகிறது. ஒருவன் தன்னுடைய தனிப்பட்ட முன் யோச னையின்றி செய்ததின் பலனாக தனக்கு உபத்திரவங்கள் ஏற்படவில்லை என்று கண்டுபிடித்தால் அடுத்ததாக அவன் பார்க்க வேண்டியது என்னவெனில் :

(2) முரண்பாடாக வாழ்ந்து கொண்டிருக்கிறானா இல்லையா என்றும் பாவம் அவன் வாசற்படியில் படுத்திருக்கிறதா, இல்லையா என்றும், அவனுடைய வியாதி அல்லது உபத்திரவம் பாவத்திற்கு அவனுடைய மனஉறுதியின்மைக்கு ஒரு தண்டனை என்று உணர்ந்து கொள்கிறானா என்று பார்க்க வேண்டும். அப்படி அவன் காண்பானானால், உடனடியாக அவன் மனந்திரும்ப வேண்டும். தன்னால் முடிந்த அளவுக்கு தவறை திருத்திக்கொண்டு, பரம பிதாவிடமிருந்து மன்னிப்பையும், இரக்கத்தையும் பெற நாட வேண்டும், சிட்சைகள் சிலவற்றை அனுபவித்தபின்பு, அவன் விடுவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கலாம்.

(3) ஒருவன் தன்னுடைய உபத்திரவங்களுக்கான காரணத்தைக் (முன் கூறப்பட்ட இரண்டிலும்) காண முடியாவிட்டால் அவனது உபத்திரவத்துக்கான சாத்தியக் கூறுகள் எந்த இயல்புடையதாயிருப்பினும், அவன் அதனை, தேவன் தம்முடைய பிள்ளைகள் தரிசித்து அல்ல, விசுவாசித்து நடக்க வேண்டும் என்று விரும்புகிறபடியால். அவர்களுக்கு நேரிடும்படி அனுமதிக்கிற வழக்கமான இடர்பாடுகளில் ஒன்றாகவே கருத வேண்டும். உலகத் தாரின் துன்பங்களைக் கண்டு நாம் மிகவும் அனுதாபப் படுவதற்கு அவருடைய மேலான பராமரிப்பின்கீழ் வரும் அவ்வித இடர்பாடுகள் நமக்கும் அவசியமா யிருக்கின்றன.

(4) யோபுவின் காரியம் மற்றும் பிறவிக் குருடனாகப் பிறந்தவனுடைய காரியம் போன்ற சில நிகழ்வுகளில், இந்த காரியங்களில் காணப்பட்டது போலவே, உபத்திரவங் களானது சரியாக ஏற்றுக் கொள்ளப்பட்டால், குண வளர்ச்சி, இரக்கம் மற்றும் ஆசீர்வாதத்தின் வழியிருப் பதற்காக தேவனால் அனுமதிக்கப்பட்டிருப்பதாக இறுதியில் காணப்படும்.

(5) ஒழுக்கத்துக்காகவும் அல்லது நீதியை படிப்பிக் கிறதற்காகவும் நல்ல குணத்தை வளர்த்துக் கொள்வதற் காகவும், தேவன் அவர்களுக்கு இன்னல்களை அனுமதிக் கும்போது தேவனுடைய பிள்ளைகள் (மற்றவர்களை நாம் இப்போது கருத்தில் கொள்ளவில்லை) நிச்சயமாக அவர் அவர்களுக்கென களஞ்சியத்தில் வைத்திருக்கிற ஆசீர் வாதங்களை உடனடியாகத் தேட ஆரம்பிக்க வேண்டும். நாம் தினந்தோறும் உண்கிற ஆகாரத்திற்காக ஜெபிக்கி றோம், உழைக்கிறோம். இந்தக் கொள்கையின்படி அவர்களுடைய நோயைத் தணிப்பதற்காக மனசாட்சிக்கு கட்டுப்பட்டு, தெய்வீக ஆசீர்வாதத்தை வேண்டிப் பெற்றுக் கொள்ளத் தகுந்த வழிமுறைகள் எதையும் அவர்கள் பயன்படுத்த இது தடையாயிருக்கக்கூடாது. இது குறைவில்லா தெய்வீக பரிபாலனமே தவிர வேறில்லை.

இந்த பார்வையற்ற மனிதனில் வெளிப் படுத்தப்பட்ட தேவனுடைய செயல் அவனுடைய இயற் கையான கண்களில் செய்யப்பட்ட அற்புதம் மாத்திரம் அல்ல. இது அதற்கும் அப்பாற்பட்டதாக, கவனித்தறி கிறவர்களுக்கு, மேசியாவில் செயல்படுகிற தேவனுடைய வல்லமைக்கு சாட்சியாயிருக்கிறது. இது அதற்கு மேலும் விரிவு படுத்தப்பட்டு குணமாக்கப்பட்ட அம்மனிதனின் காரியத்தில், அவனுடைய அறிவின் கண்களையும் திறப்பதற்கு வழிநடத்தி, கிறிஸ்துவின் சீஷனாவதற்கும் அவனைத் தூண்டியது. அவன் ஒரு பிறவிக் குருடனாய் இராமல், அவனுக்கு நேரிட்ட அனுபவங்களுக்குள் கடந்து செல்லாமலிருந்திருப்பானானால், நல்ல இயற்கையான பார்வையும் கல்வி அறிவும் பெற்றிருந்தும் மேசியாவையும் அவருடைய உபதேசங்களையும், அவருடைய செயல் களையும் குறித்து முற்றிலும் குருடானபடியால் அவரைச் சிலுவையில் அறைந்த பரிசேயரைவிட அவன் மேசி யாவை ஏற்றுக் கொள்ளக்கூடிய நல்ல இருதய நிலையில் இருந்திருப்பான் என்று எப்படி நாம் நிதானிக்க முடியும்?

கர்த்தருடைய ஜனங்களாக மாறுகிற நம் அநேக ருடைய பல காரியங்களிலும் இப்படியே நடக்கிறது. திரும்பிப் பார்க்கும்போது அந்த நேரத்தில் துன்பங் களாகவும், ஏமாற்றங்களாகவும், உபத்திரவங்களாகவும், குறைபாடுகளாகவும், துயரங்களாகவும் காணப்பட்ட காரியங்கள் உண்மையாகவே பெரிய ஆசீர்வாதங் களாகவும், அதினால் நம்முடைய மனக்கண்களைத் திறப்பதற்கு வழிநடத்தியதால் மெய்யாகவே அவைகள் தெய்வீக பரிபாலனங்களாகவும், மறைவான ஆசீர்வாதங் களாகவும் இருப்பதை நாம் தெளிவாகப் பார்க்க முடியும். தெய்வீக பாதுகாப்பை உணருபவர்கள், திரும்பிப்பார்த்து ஒவ்வொரு நாளும் தேவன் அவர்களை நடத்திய வழிக்காக துதிக்க முடியும்.

## “கிறிஸ்தவ விஞ்ஞானத்தின்” (அறிவியலின்) தவறான நம்பிக்கைகள்

இக்காலத்தில் உள்ள பல்வேறான தவறான உபதேசங்களுக்கு மத்தியில், அறிவியல் மற்றும் கிறிஸ்தவம் என்ற நோக்கு நிலையில் எதுவுமே அதிக அளவில் முன்னுக்குப்பின் முரணானதாகக் காணப்படவில்லை. ஆனால் சத்தியத்தையும், மனசாட்சியையும் புரட்டி ஆணவத்தோடு எதிர்த்து, புறக்கணிக்கிற இந்த அமைப்பு முறை இந்த இரண்டு வார்த்தைகளையும் இணைத்து அதன் பெயராகக் கொண்டுள்ளது. இந்தக் கொள்கையை வழிபடுபவர் இந்த வேத வாக்கியத்தை விளக்குவதைக் கேட்பது வேடிக்கையாயிருக்கும் என்று நாம் நிச்சயமாய் கூறலாம். அதாவது, அவர்களுடைய மொத்த அமைப்புமே வேத வாக்கியங்களுக்கு எதிராக இருக்கிறது என்பது உண்மையாயிருந்த போதிலும், அவர்கள் வேத வசனங்களை நம்புவதைப் போல போலியாக கபடத் தோற்றம் ஏற்படுத்தி அவர்களுடைய கோட்பாடுகளுக்கு ஆதரவளிக்க அவற்றைப் பயன்படுத்தி, கொள்கைக்கு ஆதரவாக, முக்கியமாக புதிதாக சேர்ந்தவர்களிடத்தில், அவைகளைப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் அதனைத் திரித்து, ஏதோ ஒரு வகையில் வஞ்சித்து அந்தப் பாடப்பொருளின் சத்தியத்திலிருந்து வெகுவாக விலகச் செய்து குறைந்த பட்சம் அநேக ஜனங்களை மிகக் குறைவான வேதாகம அறிவும் பகுத்தறிவாற்றலும் குறைந்தவர்களை, குறிப்பாக வேதாகமப் பாடப் பொருட்களின் தொடர்புகளை, “**நன்மை தீமை இன்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யாதவர்களை**” (எபி. 5 : 14) குழப்பி விடுகின்றனர்.

அவர்களுடைய கொள்கையின்படி, குருட்டுத் தன்மை போன்றதான ஒன்று இல்லவே இல்லை, இது சந்தேகமின்றி தவறாக புரிந்து கொள்ளப்பட்டக் கருத்து, தவறானதொரு நம்பிக்கை: குருடனுடைய பெற்றோர், தங்களுடைய பிள்ளை குருடனாக பிறப்பான் என்று தவறுதலாக நம்பியிருக்க முடியாதாகையால் அந்த பிள்ளையும்கூட அது பிறப்பதற்கு முன்பே இந்த தவறான எண்ணத்தைப் பெற்றிருப்பான் என்று அவர்கள் சொல்லுவார்கள் என்று நாம் யூகிக்கிறோம். மேலும் அப்போது அந்த முரண்பாடு இன்னும் அதிகரித்திருக்கிறது, அதனால் பிறக்கும்போதே எந்த குழந்தைக்கும் எண்ணங்கள் இருக்காது. எந்த காரியத்தைக் குறித்தும் சரி அல்லது தவறு என்பதை அறிந்திருப்பதில்லை என்று அறிவுள்ள ஒவ்வொருவனும் அறிந்து இருக்கிறான். இந்த கொள்கையின் பொய்யான வாதமும், இவ்வாறே, செவிடராகவும், மந்த புத்தியுள்ளவராகவும் பிறப்பவர் காரியத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், வேத வசனத்தைப் போல, தர்க்கமும், பகுத்தறிவும் “கிறிஸ்தவ விஞ்ஞானிகளிடம்” இனிமேல் செயல்படாது. அவர்களுடைய மாயையுடன் அவர்கள் கொண்டிருக்கும் மோகம் மிக அதிகமாயிருப்பதால், அவர்கள் உண்மைகளையும் பகுத்தறிவையும் வேத வாக்கியங்களையும் திரித்துக் கூற முழு ஆயத்தத்துடன் இருக்கிறார்கள். பின்பு, எல்லா சத்தியத்தையும் புரட்டி, அந்த கொள்கையில் நிலைத் திருத்தலை அவர்கள் “கிறிஸ்தவ விஞ்ஞானம்” “அல்லது கிறிஸ்தவ அறிவியல்” என்றழைக்கின்றனர்.


அவர்கள் “அறிவியல்” என்னும் சொல்லைப் பயன்படுத்துவது குறித்து நாங்கள் அவர்களுடன் தர்க்கிக்கவில்லை. ஏனெனில் குறைவாகப் படித்திருப்பவர்களும்கூட அவர்களுடைய கொள்கை அறிவியல் சார்ந்ததில்லை என்பதை கண்டுகொள்ளக் கூடியவர்களாயிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் “கிறிஸ்தவன்” என்ற வார்த்தையைப் பயன்படுத்துவது குறித்து நாங்கள் எதிர்த்து தர்க்கம் செய்கிறோம். ஏனென்றால் அநேகர், அவர்கள் இந்த வார்த்தையை பயன்படுத்துவதற்கான உரிமையைக் கொஞ்சம்கூட பெற்றிருக்கவில்லை என்பதை உணர்ந்து கொள்ளவில்லை. முழு வளர்ச்சியடைந்த ஒரு “கிறிஸ்தவ விஞ்ஞானி” வேத வசனத்தின் எந்த கருத்திலும் அவன் ஒரு கிறிஸ்தவனாயிருக்க முடியாது என்பதே எங்களுடைய வாதமாயிருக்கிறது.

## “கிறிஸ்தவ அறிவியல்” கிறிஸ்தவமல்ல

(1) பிதாவாகிய தேவனையும், நம்முடைய பாவங்களுக்குக் கிருபாதாரபலியாக அவரால் அனுப்பப்பட்ட நம்முடைய மீட்பரும், அவருக்குக் கீழ்ப்படிகிற எல்லோரையும் முடிவில் விடுவிக்கிறவருமாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவனே கிறிஸ்தவன். ஆனால் “கிறிஸ்தவ விஞ்ஞானம்” தேவன் இருக்கிறார் என்பதை மறுதலித்து நலம்தரும் கொள்கைகளை மட்டுமே நம்புவதாக அறிவிக்கிறது. ஒரு மனுஷனிடம் எந்த அளவுக்கு நலம்தரும் கொள்கைகள் இருக்கின்றனவோ அந்த அளவுக்கு தெய்வீகத்தன்மை அவனில் இருக்கிறது என்றும், எந்த அளவுக்கு ஒரு குதிரை அல்லது ஒரு நாய் நன்மைதரும் கொள்கைகளைக் கொண்டிருக்குமோ, அந்த அளவுக்கு அவை தெய்வங்களாகக் கருதப்பட்டு நேசிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். பிதாவை மறுதலிப்பதினால், அவர்கள், அவர் அனுப்பிய குமாரனையும் கூட உண்மையில் மறுதலிக்கின்றனர். அவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்ட போதிலும், அது ஒரு கிறிஸ்தவனுடைய ஏற்றுக்கொள்ளுதலாக இல்லை. அதற்கு மாறாக, அவர் ஆதாமின் சந்ததியில் வந்த ஒரு அங்கத்தினர்தான் என்றும் மற்றவர்களைவிட அவருக்கு இருந்த தனிச்சிறப்பு

அவருடைய குணாதிசயம் மற்றும் போதனைகள் சம்பந்தப்பட்டது என்றும் அவர்கள் நம்புகின்றனர். இந்த வகையில், அவர் தம்முடைய நாளில் இருந்த மற்ற மனுஷர்களைவிட உயர்ந்தவராக நின்றபோதிலும்கூட நம்முடைய நாளில், இயேசுவைக் காட்டிலும் சிறந்தவராக தன்னைக் காட்டிக் கொண்ட “மேரி பேக்கர் எட்டி” என்பவரால் உலகத்துக்கு கொண்டுவரப்பட்டிருக்கிற சில குறிப்பிட்ட தத்துவங்கள் அல்லது சத்தியங்களை அவர் தெளிவாகப் புரிந்து கொள்ளவில்லை என்று சாதிக் கிறார்கள்.

(2) பாவம் மற்றும் அதன் விளைவுகளாகிய – மரணம் மற்றும் அதனோடு சேர்ந்த துன்பங்கள் முதலான வைகளிலிருந்தும் மீட்டு இரட்சிப்பவராக கிறிஸ்துவை விசுவாசிப்பவனே கிறிஸ்தவன். ஆனால் “கிறிஸ்தவ விஞ்ஞானிகள்” பாவம் என்ற எதுவும் இல்லை என்று மறுப்பதால் பாவத்தினால் ஏற்படும் விளைவுகளையும்கூட மறுதலிக்கின்றனர். தர்க்க ரீதியாக அவர்கள் ஈடுபலியை மறுதலிக்கின்றனர். பாவிகள் எவரும் இல்லை எனில் பாவிகளுக்காக ஈடுபலி எப்படி இருக்க முடியும்? அவர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு மிகவும் அடிப்படையான ஆதாரத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து, புறக்கணிக் கிறார்கள். அது இல்லையெனில் வேத வசனத்தின்படி ஒருவனும் கிறிஸ்தவனாயிருக்க முடியாது.




“**பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்.**” (எபி. 5 : 14).

## “கிறிஸ்தவ விஞ்ஞானம்” எவ்வாறு கவர்ந்திழுக்கிறது

“கிறிஸ்தவ அறிவியலின்” அர்த்தமற்ற காரியங்கள் வேத வாக்கியங்களின்படி அறியாமையிலுள்ள வர்கள் அல்லது பலவீனமான மனநிலையிலிருப் பவர்களுக்கு மட்டுமே பரிந்துரைக்கப்படுகிறது; அவற்றின் குறிப்பிடத்தக்க கவர்ச்சியான காரியங்கள் :

(1) அவர்கள் வார்த்தையிலும் நடத்தையிலும் கனிவை யும், இரக்கத்தையும் ஒளியின் வஸ்திரமாக அவர்கள் மேல் தரித்துக் கொண்டிருந்தாலும் அவர்களுடைய காரியத்தில், கர்த்தரிடத்தில் முழுவதுமாக மனமாற்றமடைந்து, அவரு டைய அன்பின் ஆவியால் நிரப்பப்பட்ட இருதயங் களிலிருந்து வளர்ந்து வெளிப்படவில்லை; இரக்கம், பொறுமை மற்றும் தயவு வெளிக்காட்டப்பட்டாலும் அவைகளின் மெய்யான உட்பொருளான அன்பு குறைவுபட்டிருக்கிறது. அவர்களுடைய சாந்த குணம், பொறுமை, தயவு ஆகியவற்றின் பிரதான ஊற்றான அன்பை வெளிப்படுத்திக் காட்டுவதற்குப் பதிலாக, அவர்களை ஏவும் நோக்கங்களாக பேராவலையும், பணத்தின் மீதுள்ள அன்பையும் பொதுவாக வெளிப் படுத்துகின்றனர். நம்மைப் பொறுத்தவரையில் மரத்தை அதன் கனிகளால் நிதானிக்கிறோம். நாம் கற்றுணர்ந் துக்கொள்ள முடிகிற வரைக்கும், அவர்களுடைய உபதேசத் திற்கு மிக அதிக விலை கொடுக்கக்கூடிய விருப்பமுள்ள வர்களுக்கு மட்டுமே அவர்களுடைய நோக்கங்களை பரப்புகிறார்கள். நாம் பகுத்தறிந்த வரைக்கும், நோய்வாய்ப் பட்டவர்களுக்கான அவர்களுடைய ஆதரவு பணத்தின் மீதுள்ள அன்பையும், புகழ் மீதுள்ள அன்பையுமே காட்டுகிறது. “கிறிஸ்தவ அறிவியலின்” உபதேசங்களால் இவ்வுலகின் ஏழைகளில் மிகச் சிலரே, காயப்படுத்தப்பட்டு அல்லது அதன் சிகிச்சையால் அவர்களின் நோயிலிருந்து சுகமாக்கப்பட்டும் வருகின்றனர்.

(2) மருந்தில்லாமல் நோய் சுகமாகுதலும் சிலசமயங் களில் பெரும்பாலும் அற்புத சுகமாகுதலும், “***தவித்து பிரசவ வேதனைப்படுகிற சிருஷ்டியை***” கவர்ந்திழுக்கவும், ஆதாயப் படுத்தவும் திட்டமிட்ட முறைகளில் செய்யப்படும் காரியங் களாயிருக்கிறது. இலாப நோக்குடைய “விசுவாசத்தால் குணப்படுத்துபவர்கள்” போல அவர்களைக் கவர்ந்து இழுக்கின்றனர். “கிறிஸ்தவ விஞ்ஞானிகள்” மூலமாக வெளிப்படுத்தப்பட்ட இந்த வல்லமை, தேவனுடையதல்ல, ஆனால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எதிராளியுடையதாகும் என்று எங்களுடைய தெளிவான முடிவை தயக்கமின்றி உறுதியாகக் கூறுகிறோம். சந்தேகமின்றி அவன் தன்னுடைய ஊழியக்காரர்களை பொதுவான மனுக்குலத்தாரும் கற்றறிந்த மருத்துவர் களும்கூட, ஒப்பிட்டுப் பார்க்கும்போது அறியாதிருக்கும் வழிகள் மற்றும் ஊடகங்களைப் பயன்படுத்துமாறு வழிநடத்துகிறான். மனுஷ இயல்பின் இந்த வழிமுறை களை எதிர்காலத்தில் இழந்து போனவை எல்லாவற்றையும் திரும்பக் கொடுக்கும் காலங்களில் கர்த்தரால் பயன்

படுத்தப்படலாம். அவர்கள் கிறிஸ்தவத்தின் கோட்பாடு களை ஒட்டுமொத்தமாக ஏற்க மறுத்து ஒதுக்குகிறார்கள் என்ற உண்மையின் காரணமாக, மேலும் அவர்களுடைய சுகப்படுத்துதல்கள் நன்மையான பிறப்பிடத்திற்குப் பதிலாக தீமையான பிறப்பிடத்தைக் குறிப்பிடுவதாக நாம் நியாயப் படுத்துகிறோம். தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதையே மறுக்கிறவர்களுக்கும், கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக கிடைக்கும் இரட்சிப்பின் சுவிசேஷத்தை பயனற்றதாக்கு பவர்களுக்கும், தம்முடைய வல்லமையுடன் உதவி செய்ய தேவன் ஒத்துழைக்கமாட்டார் என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம். அவர்களில் காணப்படுகிற அற்புதங்களைச் செய்யும் வல்லமை நாம் நம்புகிறபடி ஆவிமார்க்கம் மற்றும் நாட்டு மரபுகளிலும் பிற மந்திரவாதங்களின் "மயக்கும் ஆற்றல்களிலும்" இருக்கிற சாத்தானின் வல்லமைதான் என்று நாங்கள் நம்புகிறோம். மேலும், அறிந்துகொள்ள, எங்களுடைய இலவச புத்தகப்பிரதிகள் "ஆவி மார்க்கம் பிசாசின் மார்க்கமே" மற்றும் "கிறிஸ்தவ விஞ்ஞானம்" ஆகியவற்றைப் பார்க்கவும்.

நற்கிரியை செய்ய சாத்தான் விருப்பங் கொள்ளக் கூடுமோ என்று கேட்கலாம்? அதற்கு எங்களுடைய பதிலாவது: அவன் பெரும்பாலும் நாகரீகமடைந்த தேசங்களிலும், எங்கெல்லாம் சுவிசேஷம் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறதோ, மேலும் கிறிஸ்தவ மண்டலங் களில் உள்ள பல்வேறு சபைப்பிரிவுகளில் இருக்கும் அதிகமாக அறியாமை அகற்றப்பட்ட ஜனங்கள் மத்தியி லேயே அவன் அப்படிப்பட்ட கிரியைகளை நடப்பிக்கிறான். ஒளியின் தூதனுடைய வஸ்திரத்தையும், இரக்கத்தையும் தரித்திருப்பது, இந்த உலகத்தின் ஒளியிடம் வழிநடத்து வதற்காக அல்ல – கிறிஸ்துவின் சிலுவையண்டைக்கு வழி நடத்த அல்ல – வேதாகமத்திற்கு வழி நடத்த அல்ல – ஆனால் இவற்றிலிருந்து விலகிச் செல்லும்படி செய்து, வேறொரு இரட்சிப்பின் நம்பிக்கைக்கும், வேறொரு போதகரிடத்துக்கு நேராக, கூடுமானால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களையே வஞ்சிக்கும்படி வழிநடத்துகிறான். நினைவிற்கொள்ள வேண்டியது என்னவென்றால், நம்முடைய கர்த்தருடைய வார்த்தைகள் சுட்டிக்காட்டியபடி, காரியங்கள் இந்த நிலைமை வரும்போது, அதாவது சாத்தானே சாத்தானைத் துரத்தி, நோய்களை சுக மாக்கும்போது, அவனுடைய சிங்காசனம் வீழ்ச்சி யடையும்படி அசைக்கப்படுகிறதைக் குறிப்பிடும் அடை யாளமாக இருக்கிறது என்பதை நினைத்துக்கொள்ள வேண்டும். அதாவது இதுவே எதிராளியானவனின் வஞ்சிக்கிற முயற்சிகளில் கடைசிகட்ட உச்சநிலை முயற்சி யாக இருக்கிறது என்று சொல்லலாம். (மத். 12 : 26; SITS Vol. 6, P 641).

## இயேசுவின் அற்புதம் உருவகமானது

கர்த்தர் அந்த குருடனுக்கு பார்வையளித்த விதம் உருவகமானது என்று நாம் கருத ஏதுவிருக்கிறது. அதாவது இது, ஒரு உருவகத்தின் கீழ் ஒரு பாடத்தை உள்ளடக்கியிருக்கிறது. நம்முடைய கர்த்தர் தம்முடைய உமிழ் நீரினால் சேறுண்டாக்கி, அதனைக் கொண்டு அவனுடைய கண்களின்மேல் பூசி, சீலோவாம் குளத்திற்கு அனுப்பி கழுவி, பார்வையடையும்படி செய்த அவருடைய செயலின் தனிச்சிறப்பை விவரிக்காததிலிருந்து, ஆராய்ந் தறியும் நம்முடைய மனதின் ஆற்றல்களைப் பயன்படுத்தி இந்த வித்தியாசமான காரியங்கள் எதைக் குறித்துக் காட்டுகின்றன என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். இருந்தபோதிலும் நம்முடைய ஆராய்ந்தறிதலுக்கு வரம்பு உண்டு. நாம் வரம்பு மீறாமல் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தைக் குறித்ததான அவருடைய வார்த்தையின் தெளிவான வாக்கியங்களின் எல்லைகளுக்குள் நம்மை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த தெளிவான வாக்கியங்களுக்கு இசைவாக, இவ்விதமாக நமது கர்த்தருடைய அடையாளமான செயலை நாம் விவரிக்கலாம்: பார்வையற்ற அந்த மனிதன் தற்கால ஜீவியத்தில் மனக்கண்கள் குருடாக்கப் பட்டிருக்கும் பொதுவான உலகமனுக்குலத்தாரை மிகவும் பொருத்தமாகக் குறித்துக் காட்டுகிறான். தேவனுடைய நற்குணம், இரக்கம், அன்பு முதலியவற்றைக் கண்டு உணர்ந்து கொள்ளக்கூடிய மற்றவர்களைப்போல, இவர்களால் இப்போது காண முடியவில்லை. அவன் பிறவிக்குருடனாய்ப் பிறந்திருப்பது இந்த கருத்துடன் இசைவுள்ளதாயிருக்கிறது. ஏனெனில் உலகத்தாரிடம் காணப்படுகிற குருட்டுத்தன்மை பெரும்பாலும், குறைந்த பட்சம் பரம்பரை வழி வந்ததாயிருக்கிறது. அவனுடைய குருட்டுத்தன்மை தேவனுடைய வார்த்தையிலும், திட்டத் திலும் குறித்துக் காட்டப்பட்ட அவருடைய கிருபையை ஒருமுறை கண்டபின்பு, குருடானவர்களை ஒருமுறை பிரகாசப்பிக்கப்பட்டு, அதன்பின்பு அந்த பிரகாசத்தை இழந்து விட்டவர்களென்று அப்போஸ்தலனால் சொல்லப் பட்ட வகுப்பாரைக் குறித்துக் காட்டவில்லை. (எபி.6 : 4-6).

அக்குருடான மனுஷன் குருடான உலகத்தை குறித்துக் காட்டுகிறபடியால், (சபை காண்கிற விதத்தில் உலகத்தார் காணவில்லை என்ற கருத்தில், சபையைக் குறித்து கர்த்தர் "**உங்கள் கண்கள் காண்கிறபடியினால், அவைகள் பாக்கியமுள்ளவைகள்**" என்றார். (மத். 13 : 16). அப்படிப்பட்ட குருட்டுத்தன்மை ஆயிர வருட யுக காலத்தில் குணப்படுத்தப்படும். "**அப்போது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்**" (ஏசா. 35 : 5) என்று வேத வாக்கியம் சுட்டிக்காட்டுகிறது.

நம்முடைய கர்த்தர் செய்த அற்புதமான நிகழ்வுகளுடன் இது ஒத்திருக்கிறது. ஏனெனில் இந்த அற்புதமானது ஒய்வு நாளில் அல்லது ஏழாம் நாளில் நடந்ததாக நமக்கு சொல்லப்படுகிறது. அது ஆயிர வருட நாளாகிய, ஏழாவது ஆயிர வருட காலத்திற்கு ஒத்திருப்பதாகவும், அடையாளப் படுத்துவதாகவும் இருக்கிறது.

இருந்த போதிலும், நமது கர்த்தருடைய வார்த் தைகள் இந்த அடையாளமான கருத்தோவியத்தின் சில பகுதிகள் இந்த யுகத்துக்குள்ள தொடர்பைச் சுட்டிக்காட்டு வதாகத் தோன்றுகிறது, ஏனெனில் "**பகற்காலமிருக்குமட்டும் நான்** (நாம்) **என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்: ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது**"(யோவா. 9 : 4) என்று கூறினார். இந்த வாக்கியத்தில் "**பகல்**" என்ற வார்த்தை "**இரட்சண்ய நாள்**" என்பதைச் சுட்டிக்காட்டுவதாகத் தோன்றுவது (2 கொரி. 6 : 2; ஏசா. 49 : 8, 9) நம்முடைய கர்த்தர் உமிழ் நீரால் சேறுண்டாக்கி, குருடனான அந்த மனுஷனுடைய கண்களில் பூசியதில் விளக்கப்படுகிறது. கண்களைக் கழுவுதலும் குணப்படுதலும் அடுத்த யுகமாகிய ஆயிர வருட யுகத்திற்குரியதாகத் தோன்றுகிறது. கர்த்தருடைய வாயில் சுரந்த உமிழ்நீர், அவருடைய வாயின் வார்த்தைகளாயிருப்பதற்கு பொருத்தமான சத்தியத்தை குறித்துக் காட்டுகிறது. இது இன்னொரு உருவகம், ஆனால் அதே வலிமையுடனும், அர்த்தத் துடனும் இருப்பதாகத் தோன்றுகிறது. அவர் சத்தியத்தை வெளிப்படுத்தி பூமியின் மண்ணுடன் - பூமியிலுள்ள அனைத்து மண்ணுடன் அல்ல, ஆனால் ஒரு சிறிய பகுதி, தெரிந்தெடுக்கப்பட்ட அல்லது தெரிவுசெய்யப்பட்ட பகுதி யுடன் சேர்த்து அவர் பூசிய சேற்றை உருவாக்கினார்.

வேத வாக்கியங்களும், இதற்கு இசைவாக தேவனுடைய கிருபையின் வார்த்தை நம்முடைய கர்த்தராகிய இயேசு மூலமாகவும் அவராலும் அருளப்பட்டு, இந்த யுகத்தில் மனுக்குலத்தின் ஒரு சிறிய பகுதியின் மீது கிரியைசெய்து, அவர்களை பிரதிஷ்டை செய்யப் பண்ணி, உலகத்தாரை ஆசீர்வதிக்கவும், குருடரின் கண்கள் மீது பூசுவதற்காகவும் எஜமானருடைய உபயோகத்திற்கென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்த நோக்கிலிருந்து பார்க்கும் போது சேறு உண்டாக்குவது தரித்திரரும் குருடருமான உலகத்தாரை ஆசீர்வதிக்க தெரிந்தெடுக்கப்பட்ட சபையை உருவாக்குவதைக் குறித்துக் காட்டுகிறது. சேறு உருவாக் குகிற இந்த வேலை மட்டும் சுவிசேஷ யுகத்தில் முன்னேற்றம் அடைந்ததோடல்லாமல், வேத வாக்கியம் குறிப்பிட்டுக் காட்டியபடி, ஓரளவு சேறுபூசும் வேலையின் பகுதியும்கூட நிறைவேறிற்று. "**ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்,**" அப்போது இந்த யுகத்தின் முடிவு வரும் என்று அறிவிக்கிறது. (மத். 24 : 14). பரோஷியா காலத்திலும், எபிபெனி காலத்திலும், 1954 -லிருந்து முக்கியமாக, எபிபெனி பாளயம் கட்டப்படு வதற்கும் சத்தியம் பெருமளவில் உலகத்தாருக்கு சாட்சி யாக அறிவிக்கப்பட்டு வருகிறது. இந்த யுகத்தின்போது உலகத்தாருக்கு சாட்சியாக அறிவிக்கப்பட வேண்டும், ஆனால் இந்த யுகத்தின்போது உலக மக்களின் மனக்கண்கள் திறக்கப்பட்டிருக்காது. அது ஆயிர வருட யுகத்தின் மிகப்பெரிய கழுவி சுத்தமாக்கும் காலம் வரைக்கும் காத்திருக்க வேண்டும். இதைக் குறித்து, வேத வாக்கியங்கள், "**அந்நாளிலே பாவத்தையும், அழுக்கையும் நீக்க, தாவீதின் குடும்பத்தாருக்கு, திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும்**" (சகரி. 13 : 1) என்று அறிவிக்கிறது. இத்துடன் முழு இசைவாயிருப்பது சீலோவாம் எனும் வார்த்தையின் தனிச்சிறப்பாகும். இது - "அனுப்பப்படுவது" அல்லது "ஊற்று" என்பதைக் குறித்துக் காட்டுகிறது.




யோவான் 9 : 25

**நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்: இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்**

பரிசேயர்கள் கர்த்தருடைய நற்குணத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். ஏனெனில் அது அவர்களுடைய குற்றங்கண்டுபிடிக்கும் மதக் கொள்கைகள் மற்றும் பாரம்பரியங்களில் சிலவற்றை மீறுவதாக இருந்தது. மதச்சம்பிரதாயங்கள் மற்றும் சடங்குகள் எந்த அளவுக்கு புத்திசாலியான மற்றும் பயபக்தியுள்ள ஜனங்களை கட்டுப்படுத்தி, குருடாக்கி இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவது கவனத்தை ஈர்ப்பதாக இருக்கிறது. மேலும் அறிவாளிகளும், பயபக்தியுள்ள எல்லோரும், தங்கள் பிதாக்களுடைய தப்பெண்ணங்கள், பயபக்திக்குரிய விசுவாசப் பிரமாணங்கள் மற்றும் பாரம்பரியங்களின் படியல்லாமல், தேவனுடைய வசனத்தின் தரத்திற்கு ஏற்ப நீதியான தீர்ப்பு செய்ய மிகவும் கவனமாயிருக்கும்படி அவர்கள் வழிநடத்தப்பட வேண்டும் என்பதற்கு இது ஒரு நல்ல பாடமாக இருக்கிறது.

மற்றொரு பாடமும்கூட இந்த காரியத்தில் காணப்படுகிறது; நம்முடைய கர்த்தராகிய இயேசுவை அறிக்கை பண்ணி, நீதியை காத்துக் கொள்ள தைரியமாக எழுந்து நின்ற அந்த மனுஷன் மிகுதியாக ஆசீர்வதிக்கப் பட்டான். ஏனெனில், அவனுடைய நம்பிக்கையை உத்தமமாய் மெய்ப்பித்துக் காட்டியதன் விளைவாக மிகவும் துன்பப்படுத்தப்பட்டு, ஜெப ஆலயத்திலிருந்து புறம்பே தள்ளிவிடப்பட்ட பின்பு கர்த்தர் அவனைக் கண்டார். (யோவா. 9 : 35). பரீட்சைகள் மற்றும் கஷ்டங் களின் கீழ் அவனுடைய உண்மைத்துவமும், மனிதர்கள் மத்தியில் கனத்தையும், பூமிக்குரிய ஐக்கியத்தையும் இழந்து துன்பப்பட மனப்பூர்வமாய் அவன் முன்வந்ததும் இன்னும் பெரிதான ஆசீர்வாதத்துக்கு நேராக அவனை வழிநடத்தி, கர்த்தருடன் நேரடியான ஐக்கியமும், தொடர்பும் கொள்ள வைத்தது.

சத்தியத்திற்கு மனக்கண்கள் திறக்கப்பட்டவர்களில் எத்தனைபேர் கர்த்தருக்கு மிகவும் உண்மையுள்ள வர்களாக, அவருடைய நன்மையை மிகவும் பாராட்டு பவர்களாக, இந்த உண்மைகளை அறிவிப்பதில் மிகவும் விசுவாசமுள்ளவர்களாய் இருக்கிறார்கள்? இவர்களில் எத்தனைபேர், அப்படிப்பட்ட விசுவாசமுள்ளதாயிருப்பது ஜெப ஆலயங்களிலிருந்தும், பெயர்ச்சபையிலிருந்தும் பிரிந்திருப்பதை அர்த்தப்படுத்துகிறது என்பதைக் கண்டறிந் திருக்கிறார்கள்? இவர்களில் எவ்வளவு பேர் நிகழ்கால சத்திய வெளிச்சத்தை அறிக்கை செய்வதின் மூலமாக கௌரவத்தையும், செல்வாக்கையும் இழந்துவிடுவோம் என்று பயந்திருக்கிறார்கள்? ஆனால் தேவனிடத்தில் நன்றியறிதலுடனும், உண்மையுடனும் கீழ்ப்படிதலுடனும் உன்னதமான நடத்தையைப் பின்பற்றியவர்கள் எல்லோ ருமே, அப்படிப்பட்ட கீழ்ப்படிதல் பெயர்ச்சபையில் ஐக்கி யத்தை இழப்பதற்கு வழிநடத்துவதோடு, கர்த்தரோடுகூட நெருங்கிய ஐக்கியத்தையும், கூட்டுறவையும், மிக நெருங்கிய தோழமையையும் பெறுவதற்கு வழிநடத்தி யிருக்கிறது என்பதைக் கண்டுகொள்கிறார்கள். ***

**உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான்**
**பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்.**
**சங். 119 : 18**

## Trichy Golden Rock Convention 2014 (மே மாதம் 17, 18)

**திருச்சி பொன்மலையில் நடைபெறும் LHMM கன்வென்ஷனில் கலந்து கொண்டு தங்கள் பிரதிஷ்டையை புதுப்பித்துக் கொண்ட, இந்த ஊழியத்தில் பங்குபெற்ற மற்றும் உதவி செய்த சகோதர, சகோதரிகள் யாவரையும் தேவன் ஆசீர்வதிப்பாராக. சங். 133: 36 : 7–9: 97 : 11. இந்த கன்வென்ஷன் காலத்தை தேவனுக்கும் இயேசுவுக்கும் சத்தியத்துக்கும் மற்றும் சகோதரர்களுக்கும் ஊழியம் செய்யும் சிறந்த சந்தர்ப்பமாகக் கண்டு, அதனைப் பயன்படுத்தி தேவனுடைய நாமம் மகிமைப்படும்விதமாக சிறப்பாக நடைபெற பிரயாசப்பட்ட ஒவ்வொருவரையும் தேவன் மென்மேலும் பெலப்படுத்தி ஆசீர்வதிப்பாராக !**

**எண். 6:24-26**


Visit us at : **www.biblestandardindia.com**

*For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact :*

Bro. V. Vincent Jeyakumar

Laymen's Home Missionary Movement

32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629



FOR PRIVATE CIRCULATION ONLY